

# குண்டு மீனும் குட்டி மீனும்

கதை எழுதியவர்: ஹேமலதா மாமி
படம் வரைந்தவர்: சுரேன் மாமா





LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 1 6/26/23 12:04 PM

குண்டுமீனுக்கும் குட்டிமீனுக்கும்
ஒரே கொண்டாட்டம்.





LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 2 6/26/23 12:04 PM


வந்தது ஆபத்து.





LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 3 6/26/23 12:04 PM

சின்னத் துவாரத்தின் ஊடாக குட்டிமீன் வெளியே வந்துவிட்டது. குண்டுமீனுக்கு வரமுடியவில்லை.





LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 4 6/26/23 12:04 PM

குட்டிமீன் சின்னப் பற்களால் கடித்தது.
குண்டுமீன் பெரிய பற்களால் கடித்தது.





LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 5 6/26/23 12:04 PM



குட்டிமீன் உதவி தேடிச் சென்றது.



LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 6 6/26/23 12:04 PM

“என்னுடைய பெரிய நண்பனுக்கு உதவ முடியுமா.....?”





LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 7 6/26/23 12:04 PM

“வேகமாக வரமுடியாது குட்டிமீன்.....”
பெரிய ஆமை கூறியது.





LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 8 6/26/23 12:04 PM


"என் நண்பனுக்கு உதவ முடியுமா.....?"



பெரிய திமிங்கிலத்திடம் கேட்டது.




LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 9 6/26/23 12:04 PM



“என் பற்கள் வலிமையற்றவை சின்ன குட்டிமீன்....”



LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 10 6/26/23 12:04 PM



‘இதோ சின்ன வாள்மீன்....’



LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 11 6/26/23 12:04 PM

“அம்மா, பெரிய குண்டுமீனுக்கும்
சின்னக் குட்டிக்கும் உதவ வேண்டும்......”





LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 12 6/26/23 12:04 PM





LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 13 6/26/23 12:04 PM

எல்லோரும் பெரிய குண்டுமீனுக்கு உதவினார்கள்.





LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 14 6/26/23 12:04 PM

“ய்..... யேய்.....ய்.....!”



பெரிய குண்டுமீன் வெளியே வந்தது.....!



LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 15 6/26/23 12:04 PM

எல்லோரும் மீண்டும் விளையாடச் சென்றனர்.





LK-LLP-15-0017_Text_GunduFishKuttyFish.indd 16 6/26/23 12:04 PM